**முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி**

**அசல் வழக்கு எண்.85/2012**

**நாள் :03.07.2023**

இந்நீதிமன்றத்து எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வா.சா.2 சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**பெயர்** : **வாசா.2.திருமதி.அம்புஜம்மாள்**
**வயது** :
**த/பெ** :
**தொழில்** :
**மதம்** :
**சாதி** :
**விலாசம்** :

**பிரதிவாதிகள், 6 முதல் 8, 11 மற்றும் 14 தரப்பு குறுக்கு விசாரணை :-**

என்னிடம் காண்பிக்கப்படும் பிரமாணமூலத்தில் 08.08.2022 அன்று கையெழுத்திட்டுள்ளேன் என்றால் சரிதான். அன்றைய தினம் எனது வீட்டில் இருந்து நேராக நீதிமன்றத்திற்க்கு வந்தேன் என்றால் சரிதான். அப்போது நான் வரும்போது காலை 10.00 முதல் 11.00 மணி வரை இருக்கும் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்க்கு வந்தவுடன் தட்டச்சு செய்யப்பட்டிருந்த பிரமாண வாக்குமூலத்தில் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக பிரமாண வாக்குமூலத்தில் கையொப்பம் போடுவதற்க்கு முன்பாக எப்போதும் வழக்கு சம்மந்தமாக யாரையும் சந்திக்க வில்லை என்றால் சரிதான். வாசாஆ.2 ஆவணத்தில் உள்ள அம்புஜம் என்கிற கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் அம்புஜம் என்று கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதிதரப்பில் என்னை குறுக்குவிசாரணை டெப்போஷிஷனில் எஸ்.அம்புஜம்மாள் என்று கையொப்பமியிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எப்பொழுதும் எஸ்.அம்புஜம்மாள் என்று முழு பெயரை தான் கையொப்பம் போடுவேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் அம்புஜம்மாள் என்று கையொப்பமியிட்டுள்ளேன் ஆனால்

வாசாஆ.2 ஆவணத்தில் அம்புஜம் என்று இருப்பதற்க்கு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எந்த விளக்கமும் கொடுக்கவில்லை என்றால் நான் என்னுடைய கையொப்பத்தை இப்படியும் போடுவேன், அப்படியும்போடுவேன், மாற்றி மாற்றி போடுவேன். ஜெனார்த்தன் மற்றும் அவருடைய மனைவி விஜய லட்சுமியும் முதலில் எழுதி வைத்த உயிலை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். அந்த உயில் எந்த தேதியில் எழுதப்பட்டது அது பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த உயிலில் யார் யாருக்கு எந்த சொத்து கொடுத்தார்கள் என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இன்றைய தேதிவரையில் அந்த பழைய உயிலை பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விஜயலட்சுமி அம்மாள் என்றைக்கு என்னை அவருடைய வீட்டிறக்கு கூப்பிட்டார் என்றால் 2006-ம் வருடம் 8வது மாதத்தில் என்னை அழைத்தார். அவர் என்னை அழைத்தபோது விஜயலட்சுமி அம்மாள் நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருந்தார் என்றால் சரிதான். நான் கையெழுத்து போடும் போது யார், யார் இருந்தார்கள் என்றால் விஜயலட்சுமி அம்மாள், ஒரு வக்கீல் மற்றும் சின்னிகிருஷ்ணன் இருந்தார்கள். அந்த வக்கீல் பெயர் எனக்கு தெரியுமா என்றால் அவர் பெயர் சந்தர்ராஜன். அந்த வக்கீல் பெயருக்கு முன்பு உள்ள இனிஷயல் தெரியுமா என்றால் கவனிக்கவில்லை. அந்த வக்கீல் எந்த ஊரில் தொழில் செய்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளபடி விஜயலட்சுமி கைநாட்டு வைத்தவுடன் நானும் சின்னிகிருஷ்ணனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டது தவிர வேறு யாரும் அதில் கையெழுத்து போடவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விஜயலட்சுமி அம்மாள் 2010 ல் காலமானார். வாசாஆ.2 ஆவணமான உயிலானது விஜயலட்சுமி அம்மாள் காலமான பிறகு பொய்யாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனது

குறுக்குவிசாரணையில் இதுநாள் வரையில் தெரியாது என நான் ஒப்புக்கொண்ட விவரங்களையும், தட்டச்சு செய்யப்பட்ட முதல் விசாரணை வாக்குமூலத்தில் கையெழுத்து செய்து தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.**

**முதன்மை சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**